## தமிழ் இணையக் கல்விக்கழகம்

## சென்னை – 600 025.

### இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)

### ஆறாம் பருவம்

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

### ஜூலை–ஆகஸ்ட் – 2020

### D051 தமிழகக் கலைகள்

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. மதுரையின் அகழி குறித்த செய்தி இடம் பெற்ற நூல் எது?
2. கொல்லற்குரிய கடமை எனப் புறநானூறு எதைச் சுட்டுகின்றது?
3. சுவஸ்திக் குளம் உள்ள திருத்தலம் எது?
4. 'பக்தி இயக்க காலம்' என யாருடைய காலத்தை அழைப்பர்?
5. தமிழ் நாட்டுச் சிற்றூர் காவல் தெய்வம் எது?
6. தென்னக எல்லோரா என அழைக்கப்படும் கோயில் எது?
7. தஞ்சை பெரிய கோயில் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
8. கார்னீலியன் மணிகள் கிடைக்கப்பற்ற அகழ்வாய்வு எது?
9. சித்திரகாரப் புலி என அழைக்கப்பட்ட பல்லவ மன்னன் யார்?
10. தஞ்சாவூர் ஓவியத்தைக் கற்றுக் கொடுக்க சென்னையில் ஓவியப் பள்ளியினை நிறுவியவர் யார்?
11. அப்பரின் தமக்கையார் யார்?

12. திருப்புகழ் அமிர்தம் என்ற மாத இதழை நடத்தியவர் யார்?

13. எந்திர எழினி குறித்துக் குறிப்பிட்ட நூல் யாது?

14. நாட்டியம் என்ற சொல்லின் நேர்த்தமிழ்ச் சொல் யாது?

15. கரகாட்டத்திற்குரிய பக்க இசை எது?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டதன் காரணம் யாது?
2. ஆலயம் என்ற சொல்லின் பொருள் யாது?
3. மனித இன வரலாற்றை எத்தனையாகப் பிரிப்பார்? அவை யாவை?
4. தமிழ்ப் பண்களின் ஏழிசை எவை?
5. கூத்தின் வகைகளுள் மூன்றினைக் குறிப்பிடுக.
6. பரதநாட்டியம் எத்தனை ஆடல் முறைகளைக் கொண்டது?
7. நடுகல் என்றால் என்ன? அவை எவ்வாறு அழைக்கப்பட்டன?
8. நாட்டுப்புற ஆடல்களுள் சிலவற்றை எழுதுக?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) பல்லவர் காலக் கற்கோயில்கள் பற்றிக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) சமணர் கோயிலில் காணப்படும் ஓவியக் கலைக் குறித்துக் கட்டுரைக்க.

2. (அ) ஆபிரகாம் பண்டிதரின் இசைத் தொண்டினை விவரி.

(அல்லது)

(ஆ) தற்கால நாடக முன்னோடிகள் குறித்துக் கட்டுரை வரைக.

3. (அ) கூத்துக்கலை குறித்த செய்திகளை இலக்கியச் சான்றுகளுடன் நிறுவுக.

(அல்லது)

(ஆ) மயிலாட்டம் குறித்து விவரி.

***